வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 10.07.2025 வியாழக்கிழமை | இதழ் : 190 | பக்கங்கள் : 12

# அரியாலை புதைகுழி குறித்து இலங்கையுடன் பிரிட்டன் பேச்சு

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர்



லண்டன், ஜுலை 10

**அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி குறித்து பிரிட்டன் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாக பிரிட்டனின் வெளி விவகார அமைச்சர் டேவிட் லமி தெரிவித்துள்ளார்.**

வெளிவிவகார குழுவின் கூட்டத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரியாலையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகள் குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் இந்த விடயம் குறித்து நேரடிப் பேச்சுகளை மேற்கொண்டுள்ளோம். கடந்த மாதம் இது குறித்து பேசினோம்.

இலங்கையின் பல பகுதிகளில் காணாமல் (11)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மை வெளிப்படுத்தப்படும்

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க

கொழும்பு, ஜுலை 10

பிள்ளையானுடன் அரசாங்கத்துக்கு எந்த டீலும் கிடையாது. அவ்வாறு டீல் இருந்திருந்தால் இனிய பாரதி கைதாகியிருப்பாரா? மக்களுடன் எமக்கு டீல் உள்ளது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவோம் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த (11)

# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய 30ஆம் ஆண்டு நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜுலை 10

யாழ்ப்பாணம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் (11)

# 2029 ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வேட்பாளர்

## மொட்டு கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 10

2029இல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2029 ஜனாதிபதி தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். நாட்டை பொறுப்பேற்பதற்கு தகுதியான இளம் தலைவராக நாமல் ராஜபக்ஷ (11)

# அரியாலையில் நேற்று மேலும் 7 எலும்புக்கூடுகள் அடையாளம்

## ஆடைகள், பாதணிகள் போன்ற தடய பொருள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜுலை 10

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது 7 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 63 ஆக அதிகரித்துள்ளது. (11)

# பிரபாகரன் பயன்படுத்திய பதுங்குகுழியை தோண்டும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜுலை 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்திய, பாரியளவிலான நிலக்கீழ் பதுங்கு குழியை தோண்டும் நடவடிக்கை நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எட்டாம் வட்டாரம் மந்துவில் கிராமத்தில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணி ஒன்றில், போரின் முன்னர், விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் தளபதிகள் பயன்படுத்தினர் என்று கருதப்படும் நிலக்கீழ் பதுங்குகுழியை தோண்டும் நடவடிக்கை, புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தனியாரின் காணி இரண்டு ஏக்கர் வரையிலான காணி, விடுதலைப் புலிகளின் முகாமாகக் காணப்பட்டது.

இந்தக் காலட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் தளபதிகள் உள்ளிட்டவர்கள் சந்திப்புகளை மேற்கொள் (11)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார்

## சபையில் கூறினார் அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, ஜுலை 10

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்பது தெரியவந்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

பிள்ளையான் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்தபோதே அவருக்கு இது குறித்து தெரிந்திருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

குறித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை பாராளுமன்ற (11)

# கடல் கடந்து நயினாதீவில் நேற்று திரண்ட பக்தர்கள்!

## தேரேறி அருள் பாலித்தார் அம்பாள்



(11)

# யாழ். விவசாயிகளின் இடர்களுக்கு நிரந்தரமான தீர்வை வழங்குங்கள்

## சிறீதரன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜுலை 10

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், வடக்கின் உப உணவுப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்து வருவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிப்படைந்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், அவர் இவ்விடயம் தொடர்பில் வலியுறுத்தியுள்ளார். (11)

# தமிழ் மொழியை கொச்சைப்படுத்தி எதிரணியினர் செயல்படுவது கவலை

## பாராளுமன்றில் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜுலை 10

தமிழ் மொழியை கொச்சைப்படுத்தும் வகையில் எதிரணி செயற்படுவது கவலையளிக்கின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி எழுப்பியிருந்த கேள்விகளுக்கு அமைச்சர் தமிழ்மொழியில் பதிலளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு- (11)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னைகளில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 10

யாழ். மாவட்டத்தில் தென்னை மரங்களில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று காலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமை உரையாற்றிய அரசாங்க அதிபர், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் கலாநிதி சுனிமல் ஜெயக்கொடி அண்மையில் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதற்கு அமைய, எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

வெள்ளை ஈ தாக்கத்தினைக் கட்டுப்படுத்த 200 விசேட தெளிகருவிகளைப் பயன்படுத்தி தென்னை மரங்களை தண்ணீர் மூலம் சுத்தப்படுத்தம் திட்டமானது எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்களுக்கு வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் சிறப்பான ஒருங்கிணைப்பினை தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஏனைய 10 பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முதற்கட்ட செயற்றிட்டத்தின் பின்னர் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக உதவிப் பொது முகாமையாளர் தே. வைகுந்தனால் விவரிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை சாவகச்சேரியிலும், 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் கோப்பாயிலும், 21 மற்றும் 22ஆம் திகதிகளில் உடுவிலும், 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நல்லூரிலும், 25 ஆம் திகதி யாழ்ப்பாண பிரதேசத்திலும் 200 தெளிகருவிகள் மூலம் தென்னை மரங்களை கழுவும் செயற்பாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுலை 10

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் மாதாந்த போயா தின நிகழ்வில இன்று வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு, இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் "போர்களும் புதை குழிகளும்" எனும் தொனிப் பொருளில் கருத்துரையும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஜெ. ஜாதுசன் கருத்துரை வழங்குவார். ஓய்வுநிலை வங்கியாளர் எஸ். சிவபாலன் தொடக்கவுரையை ஆற்றுவார். கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடல் நடைபெறும். (ஐ)

### மனித புதைகுழி விவகாரம்:

# ஜனாதிபதி அநுரவுக்கு டக்ளஸ் அவசர கடிதம்!

யாழ்ப்பாணம், ஜுலை 10

அரியாலையில் முன்னெடுக்கப்படும் அகழ்வுகளில் மனித எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் நிலையில், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக செயலாளர் சிறீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

மேலும், எக்காரணம் கொண்டும் புதைகுழி அகழ்வுகள் நிறுத்தப்படாமல் உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்கொள்ளும் வகையில் கடற்றொழிலாளர்களுக்கு விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை குறித்த கடிதத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், கிளீன் சிறீ லங்காவின் ஆட்சியில் ஈ.பி.டி.பி. தூய்மையான கட்சி என்பது நிரூபணமாகும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அரியாலையில் முன்னெடுக்கப்படுகின்ற அகழ்வுப் பணிகளில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் அகழப்பட்டு வருகின்றன. எமது பிரதேசத்தில் யுத்தம் நிலவிய காலத்தில் பல்வேறு மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதில் பல்வேறு தரப்புகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் இருக்கின்றன.

இவை தொடர்பாக கடந்த காலங்களில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது வெளிக்கொண்டு வரப்படாத நிலையில், அரியாலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அகழ்வுப் பணிகளும், அங்கு மீட்கப்படுகின்ற மனித எச்சங்களும், புதைகுழி விவகாரத்தை மீண்டும் பேசுபொருளாக மாற்றி இருக்கின்றது

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் எமது மக்களிடையே நிலவுகின்ற குழப்ப நிலையை மேலும் தூண்டிவிடுவதாக சில சுயலாப அரசியல் சக்திகளின் கருத்துகளும் செயல்பாடுகளும் அமைந்து வருகின்றன.

அரியாலை மாத்திரமல்ல, மன்னார், கொக்குதொடுவாய், துணுக்காய், மண்டை தீவு என்று எங்கெல்லாம், மனித புதைகுழிகள் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம், அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் -என்றார்.

# பாராளுமன்றில் தமிழ் மொழி சர்ச்சை; ஆளும், எதிர்க்கட்சிகள் வாக்குவாதம்

கொழும்பு, ஜுலை 10

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி இடையில் நேற்று புதன் கிழமை பாராளுமன்றில் தமிழ் மொழி தொடர்பில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.



ஹெக்டர் அப்புஹாமி எம்.பி, புத்தளம் மாவட்ட மீனவர்கள் தொடர்பிலான கேள்வியொன்றை வாய்மூல விடைக் கான கேள்வி நேரத்தில் எழுப்பியிருந்தார். இந்தக் கேள்விக்கு அமைச்சர் சந்திரசேகர் தமிழ் மொழியில் பதில் அளித்திருந்தார்.

இதன்போது, ஹெக்டர் அப்புஹாமி எம். பிக்கு அருகில் அமர்ந்திருந்த ஜே. சி.அலவத்துவல எம்.பி உட்பட பலர் கிண்டல் அடித்ததாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் ஆளுங் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல்பாட்டுக்கு கண்டனத்தை வெளியிட்டதுடன், தமிழ் மொழியில் பேசுவதற்கான அனைத்து உரிமைகளும் பாராளுமன்றத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதில் அளித்த ஹெக்டர் அப்புஹாமி எம்.பி, நாங்கள் தமிழ் எம்.பிகள், தமிழ் மக்களுடன் பழகுகிறோம். இவ்வாறான சிந்தனைகள் எம்மிடம் இல்லை. தமிழ் மொழிக்கான உரிமையை நாம் மதிக்கிறோம். அவர் தமிழ் மொழியில் பதில் அளித்தமைக்காக எவரும் இங்கு எதிர்ப்பை வெளியிடவில்லை. எவ்வித கருத்துகளையும் வெளியிடவில்லை. எவரோ ஒருவர் சிரித்தார் என்பதற்காக அது தமிழ் மொழியில் பதில் அளிப்பதை எதிர்ப்பதாகிவிடுமா? இந்த விடயத்தை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு கோருகிறேன் -என்றார்.

இதற்கு ஆளுங்கட்சி சார்பில் பதில் அளித்த அமைச்சர் சந்திரசேகர், நானும் இந்த பாராளுமன்றத்தில் பல வருடங்களாக இருக்கிறேன். எம். பிக்கள் எவ்வாறு செயல்படுகின்றனர். அவர்களது பின்புலம் செயல்பாடுகள் குறித்து நன்கு அறிவேன். ஒன்றும் அறியாமல் இருக்க நான் சிறுகுழந்தை அல்லன். எனவே, இந்த விடயம் பற்றி மேலதிகமாக நான் பேச விரும்பவில்லை. சிங்கள மொழியல் பதில் அளித்திருந்தாலும் இந்தளவான நேரம் எடுத்திருக்கும் எனக் கூறினார்.

எதிர்க்கட்சி எம். பி. ஹெக்டர் அப்புஹாமி, இந்த விடயத்தை ஹன்சார்ட்டில் இருந்து அகற்றுமாறு கோரியபோதும் சபாநாயகர் அடுத்த கேள்வியை நோக்கி நகர்ந்து வாய்த்தர்க்கத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். (அ)

# யாழ். கடுகதி ரயில் சேவை கல்கிசையில் இருந்து ஆரம்பமாகாமை குறித்து அமைச்சர் பிமல் வருத்தம்

கொழும்பு, ஜுலை 10

யாழ்ப்பாணத்துக்கான கடுகதி ரயில் சேவை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கல்கிஸை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகாததன் காரணமாகவும், அது குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்படாததன் விளைவாகவும் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்துள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, கப்பல் துறை, சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, உரிய ஆயத்தங்களின் பின்னர் ரயில் கல்கிசையிலிருந்து புறப்படுவதற்குத் தயார் நிலையில் இருந்தால் மாத்திரம் அதுபற்றி மக்களுக்கு அறிவிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான கடுகதி ரயில் சேவை (இன்டர்சிற்றி) நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் கல்கிசையிலிருந்து ஆரம்பமாகவிருந்த அதிவேக ரயில் சேவை முன்னறிவிப்பின்றி அதிகாலை 5.45 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் வகையில் மீள்திருத்தம் செய்யப்பட்டது.

இதன் விளைவாக அசௌகரியத்துக்குள்ளான பயணி ஒருவர், அவரது பேஸ்புக் மற்றும் எக்ஸ் தளங்களில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்:-

யாழ்ப்பாணத்துக்கான கடுகதி ரயில் சேவை செவ்வாய்க்கிழமை அதிகாலை கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, அதிகாலை 5.25 மணியளவில் வெள்ளவத்தை ரயில் நிலையத்தை வந்தடையும் எனக் கூறப்பட்டிருந்தது. இருப்பினும் அது முன்னறிவிப்பு எதுவுமின்றி இரத்து செய்யப்பட்டது.

வெள்ளவத்தை ரயில் நிலையத்தில் காத்திருந்த பயணிகள் வினவியதன் பின்னரே, யாழ் கடுகதி ரயில் சேவை அதிகாலை 5.45 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் எனப் பதிலளிக்கப்பட்டது.

இதுகுறித்து முன்கூட்டியே ஒலிபெருக்கியில் அறிவிக்கப்படாததன் காரணமாக பயணிகள் பலர் அதிகாலையில் மிகச் சொற்ப நேரத்துக்குள் வெள்ளவத்தையில் இருந்து கோட்டை ரயில் நிலையத்துக்குச் செல்வதற்கு வாகனங்களின்றி மிகுந்த அசௌகரியத்துக்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் குறிப்பாக வயது முதிர்ந்தவர்களுக்கும், குடும்பமாகப் பயணிப்பதற்கு தயாராக வந்திருந்தவர்களுக்கும் அநாவசியமான மனவழுத்தத்தையும் குழப்பத்தையும் தோற்றுவித்தது.

அதுமாத்திரமன்றி கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட கடுகதி ரயில் சேவைக்கான ரிக்கெற் கட்டணமாக 3,600 ரூபாய் அறவிடப்படுகின்ற போதிலும், அப்புகையிரதம் இருக்கைகள் உடைந்த நிலையில் சீராகப் பராமரிக்கப்படாமலேயே இருந்தன.

இது குறித்து போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க விசேட கவனம் செலுத்தவேண்டும் எனப் பதிவிட்டிருந்தார்.

இதனையடுத்து அப்பயணியின் எக்ஸ் தளப்பதிவின்கீழ் பதிவின்கீழ் பதிலளித்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, "இதுகுறித்து நான் ரயில் திணைக்களத்திடம் கேட்டறிந்தேன். அவர்களால் ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு யாழ்ப்பாணத்துக்கான கடுகதி ரயில் சேவை இன்றைய தினம் கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகவில்லை.

எனவே அதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும், ரயில் கல்கிசையில் இருந்து புறப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளபோது மாத்திரம் அதுபற்றி பொதுமக்களுக்கு அறிவிக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினேன்.

அதுமாத்திரமன்றி இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரி அறிவிப்பொன்றை வெளியிடுமாறும் அவர்களிடம் வலியுறுத்தினேன்.

இவ்விடயத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக அமைச்சின் சார்பில் வருத்தமடைகிறேன்- எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
10.07.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# குற்றவாளிகளை துரத்துதல்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழலை ஒழித்தல் மற்றும் குற்றவாளிகளை தண்டிக்கும் முயற்சிகளை தொடர்கிறது. அந்த வகையில், முன்னைய ஆட்சியில் அதிகாரத்துடன் இருந்தவர்கள்மீது துணிந்து கைவைக்கக் கூடிய ஓர் அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது தங்களை அடையாளப்படுத்தியிருக்கிறது. ஆனால், இதுவரையில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே ஒப்பீட்டடிப்படையில் அதிக பலமுடையவர்கள் அல்லர்.

இவர்களை சுற்றி வளைத்தது போன்று சக்திவாய்ந்த அரசியல்வாதிகள்மீது அரசாங்கம் கைவைக்குமா - அதற்கான அரசியல் தற்துணிவு அவர்களுக்கு இருக்கிறதா என்பதைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான்மீதான விசாரணை தொடர்வதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது - பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருகின்றனர். இதற்கிடையில் செம்மணி – அரியாலை விவகாரமும் ஒரு பேசுபொருளாக மாறியிருக்கிறது.

ஏற்கனவே, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் விவாகரங்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கம் இதுவரையில் எந்தவொரு விசாரணைப் பொறிமுறை தொடர்பில் கரிசனை காண்பிக்கவில்லை - அதற்கான ஆர்வத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஈஸ்டர் தாக்குதல் ஓர் எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க உள்ளக உளவு அமைப்பான எவ். பி. ஐ. தெரிவித்திருக்கிறது எனினும், அந்த தாக்குதலில் உள்ளூர் தொடர்புகள் இருந்தனவா என்னும் அடிப்படையிலேயே அரசாங்கம் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

ஈஸ்டர் தாக்குதலில் உள்ளூர் தொடர்புகள் இருக்கின்றனவா என்னும் அடிப்படையில் ஒரு விசாரணையை மேற்கொள்ள முடியுமென்றால், முற்றிலும் உள்நாட்டு தீர்மானங்களால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு புதிய விசாரணையை முன்னெடுப்பதில் என்ன சவால்கள் உண்டு? அதில், ஏன் அரசாங்கம் ஆர்வமற்று இருக்கிறது? இவ்வாறான கேள்வி எழுவது இயல்பானதுதான்.

எனினும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சில மாதங்களே ஆகியுள்ள நிலையில் அனைத்தையும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது என்னும் கருத்திலும் நியாயமுண்டு. எனவே, அவர்களுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்பதிலும் நியாயம் உண்டு. ஆனால், ஒருபுறம் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் பணியிலும் முன்னேற வேண்டும். இதேவேளை, குற்றவாளிகளையும் துரத்த வேண்டும் - இது மிகவும் சவாலான விடயம். ஆனாலும் அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும் போது மக்களுக்கு முன்னால் பேசுவதற்கான ஆதாரங்கள் சிலவற்றையாவது காண்பிக்க வேண்டும் என்னும் இக்கட்டு நிலையும் அரசாங்கத்துக்கு உண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் குற்றவாளிகளை துரத்தும் விடயத்தை அரசாங்கம் ஒரு பிரதான அரசியல் விவகாரமாகக் கைக்கொண்டிருக்கிறது. ஏனைய ஆட்சியாளர்களுக்கு இவ்வாறான பிரச்னை இருக்கவில்லை. ஏனெனில், அவர்களுக்குள் குற்றவாளிகளும் இருந்தனர். ஆனால், முற்றிலும் புதிய இலக்குடன் - புதிய நபர்களால் ஆளப்படும் அரசாங்கம் என்னும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடப்பாடு கனதியானது. அத்துடன், சவாலானது. ஆனால், அதிகம் குற்றவாளிகளை துரத்தும்போது அதுவே அரசாங்கததுக்கான நெருக்கடியாகவும் மாறிவிடக்கூடிய ஆபத்தும் உண்டு. ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் நிதானமாகவும் அவதானமாகவும் நகர்வதாகவே தெரிகிறது. எவ்வாறாயினும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் விடயத்தில் அனைவரும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியது அவசியமாகும். இதில் கட்சி, தேர்தல் நலன்களை கடந்து சிந்திக்க வேண்டும்.

## சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடற்படைக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 10

பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் கீழ் சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை கடற்படை மூலம் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச கடற்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வணிகக் கப்பல்களுக்கு, செங்கடல் மற்றும் ஈடின் வளைகுடா உளளிட்ட சோமாலிய சமுத்திர வலயத்தில் கடல் கொள்ளையர்களின் செயல்பாடுகளால், சர்வதேச சமுத்திரவியல் அமைப்பு குறித்த கடற் பிராந்தியங்கள் அதிக ஆபத்து கொண்ட வலயங்களாக 2010ஆம் ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த அச்சுறுத்தலுக்கு தீர்வாக அதிக ஆபத்துக் கொண்ட வலயங்களுக்குள் உள்நுழைகின்ற வணிகக் கப்பல்களால் வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பனிகள் மூலம் ஆயுதங்கள் தாங்கிய சமுத்திரப் பாதுகாவலர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

குறித்த கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய பாதுகாப்பு தொடர்பான முழுமையான பொறுப்பு இலங்கை கடற்படைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

## டேட்டிங் செயலி மூலம் ஏமாற்றி கொள்ளையடித்த இளைஞர்கள்!

கொழும்பு, ஜூலை 10

ஓரினச் சேர்க்கையாளருக்கான "டேட்டிங்" செயலி மூலம் ஒருவரை ஏமாற்றி, கொள்ளையடித்த ஐந்து இளைஞர்களை பாணந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாணந்துறை கடற்கரையில் வைத்து கத்தியைக் காட்டி மிரட்டி 9,000 ரூபாய் பணம், மடிக்கணினி மற்றும் கைபேசி ஆகியவற்றை கொள்ளையடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவரை, சந்தேக நபர்கள் டேட்டிங் செயலி மூலம் தொடர்பு கொண்டு பின்னர் பாணந்துறை கடற்கரைக்கு அழைத்துச் சென்று, அவரது ஆடைகளை களைந்து காணொலியாக பதிவு செய்து பின்னர் காணொலியை இணையத்தில் வெளியிடுவோமென மிரட்டியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17, 18 மற்றும் 19 வயதுடையவர்கள். அவர்கள் பாணந்துறை, பெல்லன்வில, ஹிரான, மொரோந்துடுவ, வாலனை பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## 15 வயது சிறுவனுக்கு எச்.ஐ.வி.!

கொழும்பு, ஜூலை 10

15 வயது சிறுவன் ஒருவனுக்கு எச்.ஐ.வி தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் வேதனையான விடயமாகும் என பதுளை பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.டபிள்யூ. பி.எஸ். பாலிபன தெரிவித்துள்ளார்.

உலக தோல் சுகாதார தினத்தை முன்னிட்டு பதுளை போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே இதனை கூறினார்.

சிறுவர்கள் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதாக கூறி விட்டு காட்டுக்குள் சென்று வெவ்வேறு நபர்களுடன் கூடிப் பழகி நாளை கழித்து வந்துள்ளனர். இந்நிலையிலேயே, 15 வயது சிறுவனுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

## உப்புல்தெனியவுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஜூலை 10

பணி இடைநிறுத்தப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உப்புல் தெனியவை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பயன்படுத்தி அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேக நபரை 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் விடுவிக்க உத்தரவிட்ட நீதிபதி, அவர் சிறைச்சாலைகளுக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டது.

மேலும், வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டதுடன், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

இதுவரை இருந்த அலைச்சல் சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்**

உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரவகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கடகம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்**

புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கன்னி**

பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயருவீர்.

**துலாம்**

கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**

எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கும்பம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சாதிக்கும் நாள்.

# இரும்புக்கம்பிகள், கூரிய ஆயுதங்களால் கொக்குவிலில் வீட்டின் மீது தாக்குதல்!

### 15 பேர் கொண்ட வன்முறை கும்பல் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் சென்று கற்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் கூரிய ஆயுதங்களால் வீடு மற்றும் சொத்துக்களைத் தாக்கி சேதப்படுத்தினர். நேற்று அதிகாலை 02. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று அதிகாலை 03. 45 மணியளவில் இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்தது. இதனையடுத்து விசாரணை தொடங்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த மூவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் வீடு மற்றும் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த கார் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. சந்தேக நபர்களைக் கைது செய்ய கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-05)

# மன்னார் நகர சபை தவிசாளருக்கு எதிராக முன்னாள் தவிசாளர் பொலிஸில் முறைப்பாடு

மன்னார், ஜூலை 10

மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி தனது நற்பெயருக்கும் அதே நேரம் அரச செயல்பாட்டுக்கும் களங்கம் விளைவித்துள்ளதாக கூறி மன்னார் பொலிஸ் நிலையத்தில் மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் அன்ரனி டேவிட்சன் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

கடந்த காலங்களில் மன்னார் நகர சபையின் பண்டிகை கால கடைகள் ஒதுக்கீடு மற்றும் 5ஜி தொழில்நுட்ப சேவையை வழங்கும் செயல்பாட்டுக்கு அனுமதி வழங்க இலஞ்சம் பெற்றதாகவும் அவற்றில் ஊழல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் உண்மைக்குப் புறம்பானது. பகிரங்க குத்தகை மூலம் இடம்பெற்ற விற்பனையில் எந்தவொரு ஊழலும் இடம்பெறவில்லை என அன்ரனி டேவிட்சன் குறிப்பிட்டார்.

# யாழில் மர்மமான முறையில் உயிரிழந்த நபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த நபரின் சடலம் மீட்கப்பட்டது.

இராசாவின் தோட்டம், முலவை பகுதியைச் சேர்ந்த அழகரத்தினம் கிஸ்ரிபால்ராஜ் என்ற 48 வயது நபரின் சடலமே நேற்று இவ்வாறு மீட்கப்பட்டது.

குறித்த நபரின் சடலம் முலவை சந்திப் பகுதியில் காணப்பட்டது.

இது இயற்கை மரணமா? செயற்கை மரணமா? என இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-05)

# வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் 15 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் நேற்று முன்தினம் இரவு 15 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினரால் செம்பியன்பற்று தெற்கு பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பில் 8 பொதிகள் அடங்கிய 15 கிலோ 795 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாகவும், சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.



மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திருவிளையாடல் புராணச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிரகாமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 13 நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ் சைவப்புலவர் ச. நவநீதன் "வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலை பாடசாலைகளுக்கு 2026 இறுதிக்குள் இணைய வசதி!

## பிரதமர் ஹரிணி சபையில் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 10

**2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து ,டைநிலைப் பாடசாலைகளுக்கும் இணைய வசதிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.நேற்று பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-1000 பாடாசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்டுகள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப உப கரணங்களை வழங்க முன்மொ ழியப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

1500 பாடசாலைகளுக்கு 1900 ஸ்மார்ட் போர்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கிளின் சிறிலங்கா திட்டத் தின் கீழ் ,லங்கை விமானப்ப டையின் தொழில்நுட்ப உத வியுடன் கல்வித் துறையின் அனைத்து நிலைகளையும் உள்ளடக்கிய ஒரு தேசிய கல்வி முகாமை அமைப்பை உருவாக் குவதற்கான ஆரம்பப் பணிக ளும் தொடங்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டு இறுதிக் குள் அனைத்து ,இடைநிலைப் பாடசாலைகளுக்கும் இணைய வசதிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு 5,000 ரூபாய் வரம்பற்ற தரவு தொகுப்பு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது- என்றார். (அ)

# பாரிய அளவு ஆயுதங்கள் போதைப்பொருட்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 10

பாரிய அளவிலான ஆயுதங் கள், ஒரு தொகை போதைப் பொருட்கள் என்பவற்றை களனி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கண்டுபிடித் துள்ளனர்.

இரண்டு எஸ்.எம்.ஜி வகை துப்பாக்கிகள், பத்து 9 மில்லி மீட்டர் தோட்டாக்கள் கொண்ட இரு மெகசின்கள், ரி-56 துப்பாக்கி வகை ஆயுத பாகங்கள், 9.24 கிலோ ஹெரா யின் மற்றும் 67.57 கிலோ கேரள கஞ்சா உள்ளிட்டவை மீட்கப் பட்ட பொருட்களாகும்.

கடந்த ஜூலை 03 ஆம் திகதி ராகமையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 'ஆர்மி உபுல்' என்ற நபர் கொல்லப் பட்டது தொடர்பான விசார ணைகளைத் தொடர்ந்து ஆயு தங்கள் மற்றும் போதைப்பொ ருட்கள் கண்டுபிடிக்கப்பட் டதாக பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர்.

ராகம, படுவத்த மயானத் திற்கு அருகில் சந்தேகத்திற்கிட மான மோட்டார் சைக்கிளை பொலிஸார் வழிமறித்து சோத னையிட்டனர்.

அப்போது, அவரது பையில் 09 கிலோ கிராமுக்கு அதிக மான ஹெராயின் இருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.


விசாரணையில் சந்தேக நபர், ராகமை துப்பாக்கிச் சூட் டுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை தான் வழங்கிய தாகவும், அதை தனது தற்கா லிக இல்லத்தில் மற்றொரு ஆயு தத்துடன் மறைத்து வைத்திருந் ததாகவும் கூறினார்.

இதையடுத்து குறித்த வீட் டில் நடத்தப்பட்ட சோதனை யில் இரண்டு துப்பாக்கிகளும் மீட்கப்பட்டன.

மேலும் விசாரணையில் 67 கிலோவுக்கு மேல் எடையுள்ள கஞ்சா மற்றும் ஆயுதங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் உள்ளிட்ட பிற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

26 வயதான சந்தேக நபர் பொரளை, பேஸ்லைன் வீதி யைச் சேர்ந்தவர் என்பதுடன், தற்போது மேலதிக விசார ணைக்காக காவலில் வைக்கப் பட்டுள்ளார். (அ)

# கல்விச் சபையை நிறுவுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கூடியது உப குழு



கொழும்பு, ஜூலை 10

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சசார் ஆலோச னைக் குழுவினால் நியமிக்கப் பட்ட கல்விச் சபையை நிறுவு தல் பற்றிய உப குழுவின் முத லாவது கூட்டம் அதன் தலைவ ரும் தொழில் பிரதி அமைச்சரு மான மஹிந்த ஜயசிங்ஹ தலை மையில் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது கல்விச் சபையை நிறுவுதல் தொடர்பில் இந்த உப குழுவினால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் உப குழுவின் நோக்கம் தொடர்பில் உப குழுவின் தலைவரும் பிரதி அமைச்சரு மான மஹிந்த ஜயசிங்ஹ கருத்துத் தெரிவித்தார்.

அதற்கமைய, நாட்டின் கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் கல்வித்துறை தொழில் வாண்மையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட கல்விச் சபையை நிறுவுவதற்கு இந்த உப குழு செயற்பட எதிர்பார்ப் பதாக அவர் குறிப்பிட்டார்.

விசேடமாக ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை, ஆசிரியர் கல் வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் ஆலோசகர் சேவை ஆகிய ஐந்து பிரிவுகளிலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதே இதன் பிரதான நோக்கமா கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கல்விச்சபையை நிறுவுவது தொடர்பில் அமைச் சரவை அனுமதியைப் பெறும் நோக்கில் பரிந்துரை வழங்கு வதற்கு கல்வி அமைச்சினால் தற்பொழுது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் உப குழுவில் தெரிவித்தார்.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட அந்தக் குழுவும் பாராளுமன்ற உப குழுவும் இணைந்து கூடி அடிப்படை விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடு வதற்கு உப குழுவின் தலைவர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜய சிங்ஹ முன்மொழிந்தார். (அ)

# போதைப்பொருள் விற்பனை செய்த இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 10

இரவுநேர களியாட்ட விடுதி களுக்கு போதைப்பொருட் களை விற்பனை செய்ததாக கூறப்படும் இளைஞன் ஒருவன் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் பிலியந்தலை, மடபாத, தம்பே சந்திக்கு அருகில் மேற்கொள் ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான இளைஞன் கைது செய்யப்பட்டாளார்.

கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை, மடபாத பிரதே சத்தில் வசிக்கும் 22 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரான இளைஞனி டமிருந்து 50 கிராம் கொக்கே யின், 20 கிராம் குஷ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற் றப்பட்டுள்ளன. (அ)

# துப்பாக்கிகளுடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் இரு வெவ்வேறு பகுதிகளில் உள்நாட்டுத் துப் பாக்கிகளுடன் இருவர் பொலி ஸாரால் கைதுசெய்யப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, மத்தல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அங்குனு கொலவெவ பிரதேசத்தில் உள் நாட்டுத் துப்பாக்கியுடன் சந் தேக நபர் ஒருவர் நேற்று முன் தினம்மாலை மத்தல பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

கைதுசெய்யப்பட்டவர் உடுகம பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடையவர் ஆவார்.

இதுவேளை, காலியில் பிட்டிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொல்கஹஹேன பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு பிட்டிகல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பொல்கஹஹேன பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவர் ஆவார். (அ)

# போராட்டத்தில் ஈடுபட்ட இரு விவசாயிகளை கைது செய்தமை அடிப்படை உரிமை மீறல்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 10

யானைகள் கிராமங்களுக் குள் நுழைவதை தடுப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதை கண்டித்து கடந்த 2018 ஆம் ஆண்டு பொல னறுவை பகுதியில் இடம் பெற்ற எதிர்ப்பு நடவடிக்கை யின் போது இரு விவசாயிகளை கைது செய்தமையின் ஊடாக பொலிஸார் அவர்களது அடிப் படை உரிமைகளை மீறியுள் ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

இதற்கமைய மனுதாரர்க ளான குறித்த இரு விவசாயிக ளுக்கும் அரலகங்வில பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல். ஆர். பண்டாராவுக்கு 30 ஆயி ரம் ரூபாவை தனது தனிப்பட்ட பணத்தில் இருந்து நட்டயீடாக செலுத்துமாறு உயர்நீதிமன்றம் 7ஆம் திகதி நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

பொலனறுவை பிரதேசத் தைச் சேர்ந்த ஆர்.ஏ.காமினி ஜெயரத்ன மற்றும் எச்.ஆர். எரந்த ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு திங்கட்கிழமை (7) விசாரணை எடுத்துக்கொள் ளப்பட்ட போதே இந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயர்நீதிமன்ற தலைமை நீதி யரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர் எஸ்.துரைராஜா ஆகி யோரின் ஏகமனதான தீர்மா னத்துடன் நீதியரசர் யசந்த கோடகொட இந்த தீர்ப்பை அறிவித்தார்.

மேலும் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய சந்தேக நபர்களை விளக்கமறி யில் வைக்கும் உத்தரவை நீதவான்கள் பிறபிக்ககூடாது என நீதியரசர் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேக நபர் ஒருவரை தடுப்பு காவலில் வைக்குமாறு பொலிஸார் முன்வைக்கும் கோரிக்கையின் தேவைப்பாடு தொடர்பில் நீதவானுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அத் தியாவசிய தேவை பொலிஸா ருக்கு உண்டு என அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பிணைச்சட்டத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டத்துக்கு அமைய பிணை வழங்கும் போது பிணை வழங்கலை மறுப்பதற்கான உரிய காரணம் நீதவான் கூற வேண்டும் என சுட்டிக்காட்டிய நீதியரசர்,

பிணை வழங்குதலையோ அல்லது பிணை மறுப்பிணை மேற்கொள்வதற்கோ பொலிஸ ார் முன்வைக்கும் கோரிக்கை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க முடியாது என்றும் குற்றவியல் நியாயத் தின் நோக்கத்துக்கு அமைவாக அத்தீர்மானத்தை எடுத்தல் வேண்டும் எனவும் தனது தீர்ப் பில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஜூலை முதல் 6 நாட்களில் மட்டும் 36,002 சுற்றுலா பயணிகள் வருகை!

கொழும்பு, ஜூலை 10

2025 ஆம் ஆண்டின் ஜூ லை மாதத்தின் முதல் ஆறு நாட்களில் 36,002 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தின் முதல் ஆறு நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியா விலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 8,053 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராச் சியத்திலிருந்து 3,562 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியா விலிருந்து 2,674 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 2,362 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 1,553 சுற் றுலாப் பயணிகளும், நாட் டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விலைகள் மீண்டும் உயரலாம்

## இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 10

**வாகன இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் நிபந்தனைகளை விதித்தால், உள்ளூர் வாகனச் சந்தை கடுமையான விலை உயர்வைச் சந்திக்க நேரிடும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே எச்சரித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியின் அண்மைய அறிக்கைகளின்படி, நிதி நிறுவனங்கள் ஏற்கனவே வாகன இறக்குமதிக்காக கிட்டத்தட்ட 800 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் கடிதங்களை திறந்துள்ளது.

இறக்குமதியை மீண்டும் தொடங்குவதற்கு ஆரம்பத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், மீதமுள்ள நிதியை கையாள்வது இப்போது நிச்சயமற்றதாகவே உள்ளது.

மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டமிட்டபடி இறக்குமதிக்கு கிடைக்குமா அல்லது புதிய நிபந்தனைகள் விதிக்கப்படுமா என்பதை தெளிவுபடுத்த விரைவில் அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவோம் என்று நம்புகிறோம்.

நிபந்தனைகள் விதிக்கப்பட்டால், சந்தை தேவை மற்றும் விநியோகத்தைப் பொறுத்து உள்ளூர் வாகன விலைகள் தவிர்க்க முடியாமல் மீண்டும் உயரும்.

தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக குறைந்தது 9,000 வாகனங்கள் ஏற்கனவே நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன-என்றார். (அ)

# கொழும்பு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் குறைபாடுகளை ஆராய்ந்த நீதி அமைச்சர்



கொழும்பு ஜூலை 10

கொழும்பு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள குறை பாடுகளை ஆய்வு செய்வதற் காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார நேற்று முன் தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மாவட்ட நீதிமன்றத்தின் பதிவுப் பிரிவு, ஆவணக் காப்பகம், மாவட்ட நீதிமன்றத்தின் பழைய ஆவணக் காப்பகம், உணவக வசதிகள், பிஸ்கால் பிரிவு உள்ளிட்ட நீதிமன்ற வளாகத்தின் தேவைகளை ஆய்வு செய்த அமைச்சர், ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அலுவலக இடத்தை விரிவுபடுத்துவது குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

குறிப்பாக, மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பக வசதிகளை மேம்படுத்துதல், நீதிபதிகளின் வசதிகள் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புதுப்பித்தல் பணிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த புதுப்பித்தல் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (அ)

# மகாவலி அதிகாரசபையை நீக்குவதற்கு இடமளியோம்!

## மெதகொட அபய திஸ்ஸ தேரர் சூளுரை

கொழும்பு, ஜூலை 10

வடக்கு, கிழக்கிலுள்ள காணிகளில் 40 சதவீதமானவை மகாவலி அதிகாரசபை வசம் உள்ள நிலையில், அந்த அதிகார சபையை நீக்குவதற்கு மகாநாயக்க தேரர்கள் இடமளிக்கக் கூடாது என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி மற்றும் படையினரை பாதுகாப்பதற்கான அமைப்பின் பிரதிநிதிகள் மகாநாயக்க தேரர்களை சந்தித்தனர்.

இதன்போது மேற்படி அமைப்பின் சார்பில் மெதகொட அபய திஸ்ஸ தேரர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முற்பட்டபோது, அதனை செய்யவேண்டமென மகாநாயக்க தேரர்கள் அறிவுரை வழங்கினார்கள். பின்னர் ரணில் அதனை செய்யவில்லை.

மகிந்த ராஜபக்ச ஆட்சிகாலத்தில் மாகாணசபை முறைமையிலுள்ள ஒத்திசைவுப் பட்டியலை நீக்குவதற்குரிய யோசனை முன்வைக்கப்பட்டது. அதில் கைவைக்கவேண்டாமென மகாநாயக்க தேரர்கள் சங்க அறிவுரை வழங்கினார்கள். இதற்கமைய மகிந்த செயற்பட்டார்.

தற்போது மகாவலி அதிகார சபையை இரத்து செய்வதற்குரிய முயற்சி இடம்பெற்றுவருகின்றது. எமது நாட்டில் வடக்கு, கிழக்கிலுள்ள இடங்களில் 40 சதவீதமானவை மகாவலி அதிகார சபை வசமே உள்ளது. மகாவலி அதிகார சபை கைவிடப்பட்டால் அதிகாரம் பிரதேச செயலாளர் வசம் செல்லும். அதன்பிறகு இனவாத அடிப்படையில் காணி பகிர்ந்தளிக்கப்படலாம். அது பாரதூரமான நிலைமைக்கு இடமளிக்கும்.

இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்துக்கு இடமளிக்க கூடிய இப்படி பல விடயங்கள் இடம்பெறுகின்றன. இதன் பின்னணியில் வேறு நிகழ்ச்சி நிரல் இருக்கலாம் எனவே, இப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்-என்றார். (அ)

# துறைமுக அபிவிருத்தி அமைச்சரை ஏன் இதுவரையில் விசாரிக்கவில்லை?

கொழும்பு, ஜூலை 10

பரிசோதனையின்றி 323 கொள்கலன்கள் விடுவிடுக்கப்பட்டமை முறைகேடானது என்று ஜனாதிபதி நியமித்த குழு அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து அரசாங்கத்தின் தவறு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரை ஏன் இதுவரையில் விசாரணைக்கு உட்படுத்தவில்லை. கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் என்னவென்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-75 ஆண்டுகால ஆட்சியியலை விமர்சித்து தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. கடந்த 16 ஆண்டுகளாக உப்பு இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். மோசடி செய்வதற்காக தான் அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று கடந்த காலங்களில் குறிப்பிட்டீர்கள்.

இன்று அரிசி, தேங்காய், உப்பு என்று அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. தாங்கள் குறிப்பிட்டதை போன்று மோசடி செய்வதற்காகவா அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று நாங்கள் கேட்கிறோம்.

அரச நிர்வாகத்தில் இடம்பெறும் தவறுகள் மற்றும் குறைகளை அரச அதிகாரிகள் மீது சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளும் புதிய கலாசாரத்தை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. 323 கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்திலும் இந்த பிரச்சினை தோற்றம் பெற்றது. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் என்னவிருந்தது என்பது எவருக்கும் தெரியாது.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் என்னவிருந்தது என்பதை அறிவோம், அந்த கொள்கலன்கள் எங்குள்ளது என்று கடந்த காலங்களில் இந்த அரசாங்கத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு இந்த கொள்கலன்கள் விடுவிப்பு தவறு என்று அறிக்கை சமர்ப்பித்ததும், அரச அதிகாரிகள் மீது பழி சுமத்துகிறார்கள்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் பல முறைப்பாடளித்துள்ளதாக குறிப்பிட்டீர்கள்.

அந்த விசாரணைகளின் முன்னேற்றம் என்ன ? துறைமுக அமைச்சர் மற்றும் துறைமுக பிரதி அமைச்சர் இந்த கொள்கலன்கள் விடுவிப்பு பற்றி தமக்கு தெரியும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள்.ஆனால் இதுவரை அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. ஆனால் இவ்விடயம் பற்றி பாராளுமன்றத்தில் பேசிய தயாசிறி ஜயசேகர மற்றும் அர்ச்சுனா ஆகியோர் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டார்கள்-என்றார். (அ)

# எரிபொருள் விநியோகத்தை தன்னிச்சையாக வேறொரு தரப்பினருக்கு மாற்ற நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 10

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை தன்னிச்சையாக வேறொரு தரப்பினருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய இலங்கை எரிபொருள் போக்குவரத்து பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால், எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்று சங்கத்தின் பொருளாளர் ஜகத் பராக்கிரம தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-எரிபொருள் போக்குவரத்தை ஏகபோகத் துக்கு உட்படுத்தும் முயற்சி நடக்கிறது. இந்த நேரத்தில், பவுசர் உரிமையாளர்களுக்கு மிகப் பெரிய பிரச்னை எழுந்துள்ளது. இது வரை, பவுசர் வாகனங்களில் களஞ்சியசாலைகளுக்கு எரிபொருளை எடுத்து சென்றது எங்கள் பவுசர் உரிமையாளர்களே. ஏனென்றால் நாங்கள் இலங்கையில் முக்கிய போக்குவரத்து சேவையாக இருக்கிறோம். நாங்கள் எரிபொருளை எடுத் துச் செல்லாவிட்டால், வேறுயாருக்கும் எரிபொருள் கிடைக்காது.

ஆனால் கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக, இந்த வணிகம் இரண்டு அல்லது மூன்று நெருங்கிய வணிகர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.நாங்கள் ஒரு சங்கமாக தலையிட்டு சிறிது காலம் அதை நிறுத்தி வைத்திருந்தோம்.

ஆனால் தற்போது, இந்த போக்குவரத்து சேவையை தமது நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் ஒப்படைக்க முயற்சிக்கின்றனர்.ஒஇந்த சங்கத்தில் சுமார் 400-500 பவுசர் உரிமையாளர்கள் உள்ளனர்.

# மருத்துவர் மகேஷியின் மகளுக்கு நேற்று பிணை!

கொழும்பு, ஜூலை 10

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விஷேட நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்னவின் மகளுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று குறித்த நபரை 500,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் 21 வயதுடைய குறித்த பெண், வாழைத்தோட்டம் பொலிஸாரால் கடந்த திங்கள் கிழமை கைது செய்யப்பட்டார்.

நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்ன, தான் சார்ந்த தனியார் நிறுவனம் மூலம் ரூ.50,000 மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை 175,000 ரூபாவுக்கு நோயாளிகளுக்கு விற்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பாராளுமன்ற உறுப்பினராக நிஷாந்த ஜெயவீர பதவியேற்றார்

கொழும்பு, ஜூலை 10

தேசிய மக்கள் சக்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக உஷெட்டிகே டான் நிஷாந்த ஜெயவீர சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஹர்ஷன சூரியப்பெருமவின் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த பாராளுமன்ற இடத்தை நிரப்ப ஜெயவீர எம்.பி.யாக பதவியேற்றார்.

உஷெட்டிகே டான் நிஷாந்த ஜெயவீர தேசியப் பட்டியல் தேசிய மக்கள் கட்சி எம்.பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவிப்பை இலங்கைத் தேர்தல் ஆணையகம் நேற்று முன் தினம் வெளியிட்டது.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராக முன்னர் பணியாற்றிய ஹர்ஷன சூரியப்பெரும, நிதி அமைச்சின் புதிய செயலாளராக கடமைகளை ஏற்றுக்கொள்வதற்காக தனது அமைச்சுப் பதவி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரண்டிலிருந்தும் இராஜினாமா செய்தார். (அ)

## பகிடிவதை தடுப்பு வழிகாட்டல்களை அமுல்படுத்தவேண்டியது அவசியம்

### உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 10

**பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சம்பவங்களை தடுக்க தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல் தொகுப்பை அவசியம் அமுல்படுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணையக்குழுவுக்கு உத்தரவிட்டது.**

அந்த வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்த தேவையான நிதி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வசதிகளை வழங்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருக்கு நீதியரசர்கள் குழு உத்தரவிட்டது.

ஷிரான் குணரத்ன, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய 3 நீதியரசர்கள் குழு இந்த நீதிமன்ற உத்தரவை பிறப்பித்தது.

இந்த உத்தரவுகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்ய வழக்கை 2026 ஜனவரி 14 ஆம் திகதி மீண்டும் விசாரிக்கவும் உத்தரவிடப்பட்டது.

## இலங்கை - மாலைதீவு இடையே சட்ட ஒத்துழைப்பு உடன்பாடு!

கொழும்பு, ஜூலை 10

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தமொன்று இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் இல்லாமையால், ஒருங்கிணைந்த விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

அதனால்,

அதற்காக இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக கடந்த 2022. ஆம் ஆண்டில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், இதுவரை குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்படவில்லை.

இத்தகைய பின்னணியில் உத்தேச ஒப்பந்த வரைபுக்கு மாலைதீவு அரசு உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அதற்கமைய, இருதரப்பினருக்கிடையிலான குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.-என்றார். (அ)

## மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்குப் புதியவர் நியமிப்பு

கொழும்பு, ஜூலை 10

மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு இலங்கை கடற்படையின் ஓய்வு பெற்ற கொமடோர் எம்.பீ.என்.ஏ. பேமரத்னவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் சேவையாற்றும் இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையின் விசேட தர அலுவலர் யு.எல்.உதயகுமார பெரேராவுக்கு 60 வயது பூர்த்தியடைவதால் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அதற்கமைய, வெற்றிடமாகும் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு இலங்கை கடற்படையின் ஓய்வுபெற்ற கொமடோர் எம்.பீ.என்.ஏ. பேமரத்ன நியமிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது-என்றார். (அ)

## பொரளையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு, பொரளை பகுதியில் நேற்று முன் தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

பொரளை, லெஸ்லி ரனகல மாவத்தை பகுதியில் அமைந்துள்ள ஒரு கடையில் இருந்த ஒருவரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர், துப்பாக்கிதாரிகள் சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும், இந்த துப்பாக்கிச் சூட்டில் இறப்புகள் அல்லது காயங்கள் எதுவும் ஏற்பட வில்லை.

திட்டமிட்ட குற்றவாளிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறின் விளைவாக இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## வீடுகளுக்குள் புகும் இனந்தெரியாத குழுவால் அச்சம்

கொழும்பு, ஜூலை 10

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா- தரவல மாணிக்கவத்தை தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு இனந்தெரியாத குழுவினர் இரவில் வீடுகளுக்குள் நுழைந்ததால் அம் மக்கள் தியடைந்துள்ளனர்.

முகத்தை மூடிய ஒரு குழு, விடியற்காலையில் தோட்ட வீடுகளின் ஜன்னல்கள் மற்றும் கூரைகளை திறந்து வீடுகளுக்குள் நுழைந்து வீடுகளுக்குள் சுற்றித் திரிவதாக தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

## கோடையில் விரும்பப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 3ஆம் இடம்

கொழும்பு, ஜூலை 10

2025 ஆம் ஆண்டு கோடை காலத்தில் பயணம் மேற்கொள்வதற்கு அதிகளவில் விரும்பப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

எமிரேட்ஸ் விமான நிறுவனம், தமது விமான பயணச் சீட்டு பதிவு தரவுகளைக் கொண்டு நடத்திய ஆய்வொன்றுக்கமைய, இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த தரவுகளுக்கமைய, ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் இலங்கை மீதான பயண ஆர்வம் 32 வீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் வியட்நாம் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகள் முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

இலங்கையின் பசுமையான தேயிலைத் தோட்டங்கள், பாரம்பரிய தளங்கள் மற்றும் சாகச அனுபவங்கள் உலகளாவிய பயணிகளை ஈர்ப்பதாக, குறித்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கந்தானை துப்பாக்கிச் சூடு; இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 10

கம்பஹா மாவட்டம் கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில் கடந்த 03ஆம் திகதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு, மற்றொருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தானை ரூபமுல்ல சந்தி மற்றும் கந்தானை நகரில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கந்தானை பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 26 வயதான இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## புகைப்படம் பிடிக்க சென்ற இளைஞன் சிங்கமலை குளத்தில் விழுந்து மாயம்!

கொழும்பு, ஜூலை 10

ஹற்றன் சிங்கமலை குளத் தில் தவறி விழுந்த 17 வயது இளைஞன் காணாமல் போயுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆறு நண்பர்களுடன் புகைப்படம் பிடிக்கச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியில் சாதாரண தரம் கற்று பரீட்சை பெறுபேறுக்காக காத்திருந்த தமிழ்மாறன் என்ற இளைஞனே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞர் உள்ளிட 06 பேர் நேற்று முன்தினம் குறித்த ஆற்றுப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

இதன் போதே அவர் தவறி விழுந்துள்ளார். கிடைத்த முறைப்பாட்டிற்கமைய குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார் நேற்று தேடுதல் நடவடிக்கையை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளனர். (அ)

## அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

கொழும்பு, ஜூலை 10

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவொன்றை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன் தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அறநெறிப் பாடசாலை கல்வி ஊடாக சமூகத்தின் ஆன்மீக அபிவிருத்திக்கு சிறந்த உந்துசக்தி கிடைக்கிறது.

எனவே, எந்தவொரு தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும் இன்றி அறநெறிப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் சேவையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதனை ஊக்குவித்தல் மற்றும் அவர்களது தனித்துவ அடையாளத்தை பாதுகாப்பதுடன், சமூகத்தின் நல்லிருப்புக்குத் அத்தியாவசியமான அறநெறிக் கல்வி அபிவிருத்திக்காக அறநெறி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு மற்றும் சீருடைக் கொடுப்பனவை வழங்குதல் மிகவும் பொருத்தமானது என இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2026 ஆண்டு தொடக்கம் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதங்களுக்குரிய பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் ஒரு ஆண்டு கால தொடர்ச்சியான சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கொடுப்பனவு மற்றும் சீருடைக் கொடுப்பனவு அடங்கலான கொடுப்பனவாக ரூபா 7,500 - தொகையை ஆண்டுக்கு ஒரு தடவை செலுத்துவதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகளை அபகரிக்க வனவளத் திணைக்களம் முயற்சி!

## மட்டக்களப்பு வாகரையில் தொடரும் அத்துமீறல்

மட்டக்களப்பு, ஜூலை 10

**கிழக்கு மாகாணத்தில் வாழும் பழங்குடியின தமிழ் மக்களை அங்கிருந்து அகற்றிவிட்டு அவர்களின் காணிகளை அபகரிக்க வனவள பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை வனவள பாதுகாப்புத் திணைக்களம் சூறையாடியுள்ளதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒப்புக்கொண்ட சில நாட்களுக்குப் பின்னர், இந்தத் திணைக்களம் மீதான புதிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தேக்கஞ்சேனை, நாவற்குளம் மற்றும் சம்பக்கலப்பை ஆகிய கிராமங்களில் சுமார் 70 ஆண்டுகளாக வசிக்கும் சுமார் 150 தமிழ் பேசும் பழங்குடி குடும்பங்களை, அவர்களின் காணிகளை விட்டு வெளியேறுமாறு வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தொடர்ந்து அச்சுறுத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேக்கஞ்சேனையில் வசிக்கும் பழங்குடியின மக்கள், வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளின் அச்சுறுத்தல் குறித்து கடந்த 7 ஆம் திகதி வாகரை பிரதேச செயலாளருக்கு எழுத்துமூலமாக தெரியப்படுத்தினர்.

இந்தக் கடிதத்தை பெற்றுக்கொண்ட வாகரை பிரதேச செயலாளர், இந்த விடயத்தை ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச கிராம அலுவலருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேக்கஞ்சேனை, நாவற்குளம் மற்றும் சம்பக்கலப்பை ஆகிய கிராமங்களில் வசிக்கும் பழங்குடி மக்கள், காட்டில் தேன் சேகரித்தல், நன்னீர் மீன்பிடி மற்றும் நெல், நிலக்கடலை மற்றும் மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட பயிர்ச்செய்கை ஊடாக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்களாக வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் தங்களை காணியைவிட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேன் எடுக்க காட்டுக்குள் நுழைய விசேட அதிரடிப்படையினர் அனுமதிக்காமையால், தாங்கள் ஏற்கனவே வாழ்வாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

இதேபோன்ற பழங்குடி மக்கள் வசிக்கும் கல்லரிப்புச்சேனை நான்காம் கட்டை, மூன்றாம் கட்டை கிராமங்களில் கடந்த பெப்ரவரி மாதம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், பழங்குடி மக்கள் வாழ்ந்த 13 குடிசைகளை தீயிட்டு கொளுத்தியதோடு, அவர்கள் உணவுக்காக சேகரித்த பாசிப்பயறு, நிலக்கடலை மற்றும் நெல் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பில் வாகரை பொலிஸில் முறைப்பாடு செய்து நான்கு மாதங்கள் கடந்துள்ள போதிலும், எந்தப் பலனும் கிடைக்கவில்லை எனவும் அந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(எ)



# அக்கரைப்பற்று பாடசாலையில் நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம்

அக்கரைப்பற்று, ஜூலை 10

அரசாங்கத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நாடு தழுவிய தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் ஓர் அங்கமாக நாடு முழுவதிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நேற்று தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட நுளம்பு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் அதிபர் எல். நசீபா தலைமையில் நடைபெற்றது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலையின் சுற்றுவட்டாரத்தில் உள்ள வடிகான்கள், கால்வாய்கள், நீரேந்து பகுதிகள் போன்றன சுத்தப்படுத்தப்பட்டு நுளம்புகள் பெருகும் சூழல் அழிக்கப்பட்டது.

இதேவேளை பாடசாலையை அண்டிய பிரதேசத்தில் பற்றைக் காடுகளாய் சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கத் தக்க வகையில் வளர்ந்து காணப்பட்ட மரம், செடி கொடிகள், புற் பூண்டுகள் என்பன அகற்றப்பட்டு துப்பரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதுதவிர கிளீன் சிறீலங்கா விசேட வேலைத்திட்டத்தின் கீழ் நுளம்புகளின் தாக்கம் பற்றியும் அதன் கேடுகள் தொடர்பிலும் விசேட ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் என்பனவும் நடைபெற்றன.

# இம்ரான் எம். பியின் உயிருக்கு அச்சுறுத்தல்

## சி. ஐ. டியில் முறைப்பாடு

திருகோணமலை, ஜூலை 10

உயிர் அச்சுறுத்தல் மற்றும் களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்தார்.



குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்காத காரணத்தால் குச்சவெளி மற்றும் புல்மோட்டை பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் சில கட்சி ஆதரவாளர்கள் தனக்கு சமூக வலைத்தளம் ஊடாகவும் ஏனைய வழிகளிலும் உயிர் அச்சுறுத்தல் விடுத்ததோடு தொடர்ச்சியாக களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தனர்.

எனவே அவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தனது முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அத்துடன் தனது சட்டத்தரணி ஊடாக அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளதாக இம்ரான் எம். பி. தெரிவித்தார்.

(எ)

# அம்பாறையில் வெளிநாட்டு பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

பொத்துவில், ஜூலை 10

அம்பாறை மாவட்டம் பொத்துவில் - அறுகம்குடா பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இங்கு வருகை தரும் உள்ளூர், வெளிநாட்டு பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுபவர்களை பாதுகாப்பதற்கென படையினர் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பொத்துவில் - அறுகம்குடா பகுதி சுற்றுலா இடங்களை நோக்கி செல்லும் போது ஊறணி பகுதியிலிருந்து பொத்துவில் நகரப்பகுதி வரை இராணுவத்தினர், பொலிஸார், கடற்படையினரின் தற்காலிக வீதித் தடையுடன் கூடிய வீதிச் சோதனை சாவடி அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடும் பாதுகாப்பு கெடுபிடிக்கு மத்தியில் பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் முக்கிய சந்திகள், இதர வர்த்தக நிலையங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் என மூன்று அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர சந்தேகத்திற்கிடமாக இப்பகுதிகளுக்கு வருகை தந்தவர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டதுடன் இரவு வேளையில் இடையிடையே தற்காலிக வீதித் தடைகள், பரிசோதனையும் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்படுகின்றன. அத்துடன் இடையிடையே விசேட அதிரடிப்படையினரின் ரோந்தும் இடம்பெறுகிறது.

மேலும் வீடுகள், கட்டடங்களில் படைத் தரப்பினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சில இடங்களில் ட்ரோனின் உதவியுடன் வான் பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக இஸ்ரேலிருந்து பொத்துவில் பகுதிக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதையிட்டு அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இவ்வாறு பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சோதனைச் சாவடிகளில் பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வாகனங்களை இடைமறித்து சோதனை செய்வதுடன் தற்காலிக வீதித் தடைகளையும் ஏற்படுத்தி அப்பகுதியால் சென்று வரும் வாகனங்களையும் பதிவு செய்து வருகின்றனர். அறுகம்குடா பிரதேசத்தில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ)

# தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் குறித்து ஆராய்வு

நிந்தவூர், ஜூலை 10

தேசிய காயங்கள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு 2ஆம் நாளான நேற்று முன்தினம் “வேலைத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் தடுப்பு தினம்” நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

2025 ஆம் ஆண்டு தேசிய காயங்கள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு “வேலைத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களை இனங் காண்போம் அவற்றை தடுப்போம்” எனும் கருப்பொருளின் கீழ் நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் வேலைத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு விபத்துக்கள் இடம்பெற சாத்தியமுள்ள காரணிகளை இனங்கண்டு விபத்துகள் இடம்பெறா வண்ணம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது பற்றிய அறிவுரையும் வழங்கப்பட்டது.

(எ-01)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு திசைகோட்படுத்தல் செயலமர்வு

சம்மாந்துறை, ஜூலை 10

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச சபைக்கு இம்முறை தெரிவாகிய உறுப்பினர்களுக்கான சபை நடவடிக்கைகள் மற்றும் சபை கூட்ட நடவடிக்கைகள் தொடர்பான திசைகோட்படுத்தல் செயலமர்வு சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் எம். மாஹிர் தலைமையில் ஜனாதிபதி விளையாட்டுக் கட்டட தொகுதி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம். நௌஷாட், ஓய்வு நிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். இர்ஷாட், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஆய்வு உத்தியோகத்தர்களான எம். நிஸ்வி, எம். இஸ்மாயில் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

(எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மக்கள் அனைவரையும் ஒரு முகாமில் அடைக்க திட்டம்



காஸா, ஜூலை 10

**காஸாவில் உள்ள அனைத்து பலஸ்தீனியர்களையும் ரபா நகரில் இடிபாடுகள் கொண்ட ஒரு முகாமில் தங்க வைப்பதற்கான திட்டங்களை இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் வகுத்துள்ளார் என்று அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

இதனை அவர் "மனிதாபிமான நகரம்" என்று வர்ணித்துள்ளார். ஆரம்பத்தில் 6 இலட்சம் பலஸ்தீனர்கள் - இறுதியில் 21 இலட்சம் மக்கள் வசிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் இந்தத் திட்டத்தை "மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவதற்கான திட்டம் என சட்டநிபுணர்களும் புத்திஜீவிகளும் சாடியுள்ளனர்.

ரபா நகரின் இடிபாடுகளை அகற்றி அந்த முகாம் நிறுவப்படவுள்ளது. இதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சர் பிறப்பித்துள்ளார். பலஸ்தீனியர்கள் உள்ளே நுழைவதற்கு முன்பு பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதன்பின்னர், வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் இஸ்ரேல் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் டொனால்ட் ட்ரம்ப் அதிக எண்ணிக்கையிலான பாலஸ்தீனியர்கள் காசாவை விட்டு வெளியேறி அந்தப் பகுதியை "சுத்தப்படுத்த" வேண்டும் என்று பரிந்துரைத்ததிலிருந்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உள்ளிட்ட இஸ்ரேலிய தலைவர்கள் கட்டாய நாடு கடத்தலை உற்சாகமாக ஊக்குவித்து வருகின்றனர் பெரும்பாலும் இதனை ஓர் அமெரிக்க திட்டமாக முன்வைக்கின்றனர்.

இஸ்ரேலின் திட்டம் சர்வதேச சட்டத்தை மீறுவதாக இஸ்ரேலின் முன்னணி மனித உரிமைகள் வழக்கறிஞர்களில் ஒருவரான மைக்கேல் ஸ்பார்ட் தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் இந்தத் திட்டத்துக்கு பலரும் எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# பிரான்ஸில் காட்டுத்தீ

பாரிஸ், ஜூலை 10

பிரான்ஸின் தெற்கு துறைமுக நகரான மார்ஷெல் நகரில் காட்டுத்தீ பரவி வருகிறது. இதனால், விமானம், பஸ், ரயில் சேவைகள் முடங்கின. முக்கிய வீதிகள் மற்றும் பல்வேறு சுரங்கப் பாதைகளும் மூடப்பட்டுள்ளன. பிரான்ஸின் 2ஆவது மிகப் பெரிய விமான நிலையங்களில் ஒன்றான மார்ஷெல்லே விமான நிலையத்தில் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. (எ)

# டெக்சாஸ் வெள்ளம் பலி 107ஆக அதிகரிப்பு



நியூயோர்க், ஜூலை 10

அமெரிக்காவின் டெக்சாஸை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கிய திடீர் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 107 ஆக அதிகரித்துள்ளது. எனினும், பலர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

மழையின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற நிலையிலும் மீட்பு பணிகள் தொடர்கின்றன. சேறு நிறைந்த ஆற்றங்கரையில் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்படுகிறது. பேரழிவு ஏற்பட்டு 4 நாட்கள் கடந்த நிலையில் உயிர் பிழைத்தவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கை மங்கி வருகிறது என்று கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட கனமழையால் குவாடலூப் நதி பெருக்கெடுத்தது. இதில், 56 பெரியவர்கள்- 31 சிறுவர்கள் என குறைந்தது 87 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அமைதி நோபல் பரிசு; ட்ரம்ப் தகுதியானவர்!

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

வாஷிங்டன், ஜூலை 10

அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தகுதியானவர் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள பெஞ்சமின் நெதன்யாகு ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்தார். இதன்போது, "ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒன்றன் பின் ஒன்றாக நாடுகள் - பிராந்தியங்களில் அமைதியை ஏற்படுத்துகிறார். எனவே, நோபல் பரிசு குழுவுக்கு அனுப்பிய பரிந்துரை கடிதத்தை நான் தற்போது தங்களுக்கு வழங்குகிறேன். அமைதிக்கான நோபல் பரிசு பெற நீங்கள் தகுதியானவர். நீங்கள் அதைப் பெற வேண்டும்" எனக் கூறினார்.

நெதன்யாகுவின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய டொனால்ட் ட்ரம்ப், "மிக்க நன்றி. நீங்கள் பரிந்துரை கடிதம் அனுப்பி இருப்பது எனக்குத் தெரியாது. குறிப்பாக, நீங்கள் என்னை பரிந்துரைத்திருப்பது உண்மையில் அர்த்தம் நிறைந்தது. மிக்க நன்றி. நான் போர்களை நிறுத்துகிறேன். மக்கள் கொல்லப்படுவதை நான் வெறுக்கிறேன்." என்றார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேல், காசா மீது நடத்தி வரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என்றும் ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும், ஹமாஸ் ஆயுதங்களை கீழே போடும் வரை போர் தொடரும் என இஸ்ரேல் கூறி வருகிறது.

முன்னதாக, ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கூறி அந்நாட்டின் மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகளை எடுத்தது. பின்னர், அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியது. அதன் பின்னர் அமெரிக்கா விடுத்த அழைப்பை ஏற்று ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தான் ஜனாதிபதியை பதவி நீக்குவதற்கு திட்டம்?

## இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவும் சதி



இஸ்லாமாபாத், ஜூலை 10

பாகிஸ்தான் ஜனாதிபதியும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் (பி. பி. பி.) இணை தலைவருமான ஆசிப் அலி சர்தாரி பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. எனினும், இதனை, அவரின் கட்சியின் முக்கியஸ்தர்கள் மறுத்துள்ளனர். இதேவேளையில், இராணுவத் தளபதி அசிம் முனீர் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்றும் தகவல்கள் கசிகின்றன.

கடந்த 2024 நடந்த பொதுத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பி. எம். எல். -என் ) கட்சி. போதிய பெரும்பான்மை இல்லாததால், பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆதரவளித்தது. இதையடுத்து, பி. எம். எல். -என் கட்சியின் ஷெபாஸ் ஷெரீப் மீண்டும் பிரதமராக பதவியேற்றார். ஆசிப் அலி சர்தாரி நாட்டின் ஜனாதிபதியானார்.

இந்நிலையில், ஆசிப் அலி சர்தாரிக்கும் இராணுவத் தளபதி அசிம் முனீருக்கும் இடையே மோதல் இருப்பதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, அரசாங்கத்துக்கு உள்ள அதிகாரத்தைக் காட்டிலும் இராணுவத்துக்கு அதிக அதிகாரத்தை உறுதிப்படுத்த அசிம் முனீர் முயல்கிறார் என்றும் அதற்கு மறைமுக கட்டுப்பாடுகளை விதிக்கும் நடவடிக்கைகளை ஆசிப் அலி சர்தாரி எடுக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

இதனிடையே, ஆசிப் அலி சர்தாரியின் மகனும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான பிலாவல் பூட்டோ, அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்த சமீபத்திய பேட்டியில், இந்தியாவின் நம்பிக்கையை பெற முக்கிய தீவிரவாதிகளை அந்நாட்டிடம் ஒப்படைப்பதில் பாகிஸ்தானுக்கு ஆட்சபனை இருக்காது என கூறி இருந்தார். இது பாகிஸ்தானில் உள்ள ஜிகாதி குழுக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இராணுவத் தளபதியின் கோபத்துக்கு இதுவும் ஒரு காரணம் என கூறப்படுகிறது.

இவை ஒருபுறம் இருக்க, சமீபத்திய உச்ச நீதிமன்ற அரசமைப்பு அமர்வு அளித்த சமீபத்திய தீர்ப்பின் காரணமாக, ஆளும் பி. எம். எல். (என்) கட்சியின் பலம் தேசிய அவையில் 218இல் இருந்து 235 ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் அந்தக் கட்சி தனிப்பெரும்பான்மையை பெற்றுள்ளது. எனவே, பி. பி. பி.இன் ஆதரவு தேவை இல்லை என்ற நிலை உருவாகி இருப்பதும் சர்தாரி நீக்கத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

எனினும், பி. பி. பி. கட்சியின் பொதுச் செயலாளர் ஹூசைன் புகாரி இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இதனிடையே, இராணுவத் தளபதி அசிம் முனீர் நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அதன் ஒரு பகுதியாகவே சர்தாரியை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கும் முடிவை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

# நைஜீரியாவில் லொறி மீது பஸ் மோதி விபத்து

## 21 பேர் உயிரிழப்பு

அபுஜா, ஜூலை 10

நைஜீரியாவில் லொறி மீது பஸ் மோதிய கோர விபத்தில் 21 பேர் பலியாகினர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டின் கானோ மாகாணத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஜாரியாவில் இருந்து கானோ நோக்கி நேற்று முன்தினம் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த பஸ்ஸில் 23 பேர் பயணித்தனர்.

அப்போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், எதிரே வந்த லொறி மீது வேகமாக மோதியது. இந்தக் கோர விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 2 பெண்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி

## ஒருநாள் தொடரும் இலங்கை வசமானது

கொழும்பு, ஜூலை 10

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரையும் இலங்கை அணி கைப்பற்றியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 1-0 என இலங்கை அணி கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரில் முதல் இரு ஆட்டங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன.


இந்த நிலையில், ஒருநாள் தொடர் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் 3ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 285 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 124 ஓட்டங்கள் குவித்தார்.

தொடர்ந்து 286 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணியினர், இலங்கை வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர்.



இறுதியில் பங்களாதேஷ் அணி 39. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 186 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இலங்கை அணி ஒருநாள் தொடரையும் கைப்பற்றி அசத்தியது. (எ)



# விம்பிள்டன் ரென்னிஸில் அரையிறுதியில் அமண்டா

லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அமண்டா அனிசிமோவா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான அமண்டா அனிசிமோவா, ரஷ்யாவின் அனஸ்தேசியா பௌலியுசென்கோவா உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அமண்டா அனிசிமோவா 6-1, 7-6 (11-9) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)



# முதல் வீரராக அரையிறுதிக்கு முன்னேறிய ரெய்லர் பிரிட்ஸ்

லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முதல் வீரராக அரையிறுதிக்கு முன்னேறினார் ரெய்லர் பிரிட்ஸ்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ரெய்லர் பிரிட்ஸ், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் உடன் மோதினார்.

இதில் முதல் 2 செற்களை பிரிட்ஸ் கைப்பற்றிய நிலையில் 3ஆவது செற்றை கச்சனோவ் கைப்பற்றினார். இதனால் 4ஆவது செற் பரபரப்புக்குள்ளானது. இதனையடுத்து நடைபெற்ற 4ஆவது செற் ஆட்டத்தில் பிரிட்ஸ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)


# அல்காரஸ் வெற்றி


லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற அல்காரஸ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், பிரிட்டனின் கேமரூன் நோரி உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கார்லஸ் அல்காரஸ் 6-2, 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் கார்லஸ் அல்காரஸ், அமெரிக்காவை சேர்ந்த ரெய்லர் பிரிட்ஸ் உடன் மோதவுள்ளார்.





# விம்பிள்டன் ரென்னிஸில் சபலெங்கா முன்னேற்றம்

லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு அரினா சபலெங்கா முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா ஜேர்மனியின் லாரா சீக்மண்ட் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அரினா சபலெங்கா 4-6, 6-2, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் அரினா சபலெங்கா, அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவா உடன் மோதுகிறார். (எ)

## சிம்பாவேயை வீழ்த்தி

# தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் வெற்றி

புலவாயோ, ஜூலை 10

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாவே அணியை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

அத்தோடு, டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா முழுமையாக கைப்பற்றியது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட போட்டி புலவாயோ நகரில் நடைபெற்றது. இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி 114 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 626 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக வியான் முல்டர் 367 ஓட்டங்கள் குவித்தார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய சிம்பாவே அணி, தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 43 ஓவர்களில் 170 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், மீண்டும் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 2ஆவது இன்னிங்ஸில் 77. 3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்தது. அந்த அணி 220 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 3ஆவது நாளிலேயே முடிவுக்கு வந்த இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 236 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றி சிம்பாவே அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தியது. (எ)

# அயர்லாந்து அணி அறிவிப்பு

டப்ளின், ஜூலை 10

சிம்பாவேவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி - 20 தொடரில் விளையாடும் அயர்லாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவே மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடரில் முதலில் ரி - 20 போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெறுகின்றன.

இந்த நிலையில், இந்தத் தொடர்களுக்கான அயர்லாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிகளுக்கு கேபி லூயிஸ் அணித் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2029 தேர்தல்...

திகழ்கின்றார். அவரே எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்.

பொய் கூறி ஆட்சியை பிடித்தாலும், பொய்கூறி ஆட்சியை நடத்த முடியாத நிலை தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்டுள்ளது. மொட்டு கட்சியின் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்கு சென்றது. எனவே, அடுத்த தேர்தலில் எம்மால் வெல்லமுடியும்-என்றார். (அ)

## அரியாலை...

ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுடன் நாங்கள் நெருக்கமான தொடர்பை பேணி வருகின்றோம். அவர்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக அரச சார்பற்ற அமைப்புகள் உட்பட, ஏனைய தரப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றோம்.

எங்களால் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியுமா என்பது குறித்து ஆராய்வதற்கு நான் தயார். மனித புதைகுழி விடயத்தில் திறன் தொடர்பான பிரச்னைகள் உள்ளமை குறித்த புரிந்துணர்வு காணப்படுகின்றது.

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. இதன் காரணமாக, இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான நியாயாதிக்கம் சர்வதேச நீதிமன்றத்திற்கு இல்லை-என்றார். (அ)

## அரியாலையில்...

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 14ஆம் நாள் அகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்றைய அகழ்வின்போது ஏழு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 63 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 54 என்புத் தொகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

நேற்றை அகழ்வில் சிறுமியின் ஆடை ஒன்று உட்பட, சில ஆடைகள் மற்றும் பாதணிகள் போன்ற தடயப் பொருட்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டு, சான்றுப் பொருட்களாக நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும், மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், குறித்த பகுதி "தடயவியல் அகழ்வாய்வு தளத்தின் இரண்டாவது பிரதேசமாக" நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அவற்றில், அடையாளம் காணப்பட்ட என்பு எச்சங்கள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. அவை இன்று அகழ்ந்தெடுக்கப்பட்டு அவை தொடர்பான எண்ணிக்கைகள் அறிக்கையிடல்கள் இன்று வெளியிடப்படும்.

யாழ். நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா. ரனிதா, சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரபாகரன்...

வதற்காக, பரியளவில் நிலக்கீழ் பதுங்கு குழி ஒன்று அமைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு போருக்கு பின்னர், குறித்த காணியில், கண்ணிவெடி அகற்றும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

போரின் குண்டுத் தாக்குதல்களால், பதுங்கு குழியின் வாயில்கள் மூடப்பட்ட நிலையில், அதனை மக்கள் பொருட்படுத்தவில்லை. இந்த நிலக்கீழ் பதுங்கு குழி சுமார் 20 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலக்கீழ் பதுங்கு குழியில், விடுதலைப் புலிகளின் தங்கமோ அல்லது ஆயுதங்ளோ புதைக்கப்பட்டிருக்கலாம் என சிலர் வீட்டின் உரிமையாளர்களுக்கு தெரியாமல் நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையை முன்னெடுத்தமை, வீட்டின் உரிமையாளர்களுக்கு தெரியவந்தது.

அதன் பின்னர், புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த பகுதியை பார்வையிட்டு, நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு நேற்று குறித்த நிலக்கீழ் பதுங்கு குழியை தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகள், சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில், குறித்த பகுதியில், கனரக இயந்திரம் கொண்டு துப்பரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிலக்கீழ் பதுங்கு குழியில் நீர் நிரம்பி காணப்படுவதால், அதனையும் வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்க சென்ற, முல்லைத் தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன், குறித்த பகுதிகளை பார்வையிட்டதுடன், தொடர்ந்தும் இன்று அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க, பொலிஸாருக்கு பணித்துள்ளார். (அ)

## கடல் கடந்து...

யாழ்ப்பாணம், ஜூலை 10

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று நடைபெற்றது. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 15 நாள்கள் நடைபெற்றுவரும் திருவிழாவில் 14 ஆம் திருவிழாவான நேற்று தேர்த்திருவிழா நடைபெற்றது. அதிகாலை சிறப்புப் பூசைகள் முடிவடைந்த பின்னர் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் தேரில் ஏறி அம்மன் காட்சியளித்தார்.

நாகபூசணி அம்மன் ஆலய தேர் திருவிழா ஒவ்வொரு வருடமும் பிரமாண்டமாக இடம்பெறுவது வழக்கமான ஒன்றாகும். நயினை நாகபூசணி அம்மனை காண நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கடல் கடந்து பக்தர்கள் வருகை தருவது வழக்கம்.

அந்த வகையிலே நேற்றும் நாட்டின் பல பகுதிகளில் இருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் அம்மனின் தேர் உலா காட்சியைக் காண திரண்டிருந்தனர்.

## தமிழ் மொழியை...

எனது தாய் மொழி தமிழ். அந்த மொழியிலேயே நான் பதிலளித்தேன். கேட்கப்பட்ட கேள்விக்கு - தெளிவாக விளக்கமளித்தேன். ஆனால், எதிரணியில் உள்ளவர்கள் தமிழ் மொழியை பார்த்து எள்ளிநகையாடுகின்றனர். தமிழ் மொழியை கொச்சப்படுத்துகின்றவர்களாக மாறியுள்ளனர்.

நானும் இந்த பாராளுமன்றத்தில் பல வருடங்கள் இருந்துள்ளேன். ஒருவரின் சிரிப்பு மற்றும் நக்கலை பார்க்கும்போது அவர்கள் என்ன கூற வருகின்றார்கள் என்பது தெரியும். தமிழ் மொழியில் பதிலளிக்கும்போது அந்த மொழியை கொச்சைப்படுத்தும் எதிரணி இருப்பது கவலைக்குரிய விடயமாகும்-என்றார். (அ)

# "பழிவாங்கும் நோக்குடன் செயல்படும் அநுர அரசு"

கொழும்பு, ஜூலை 10

கொள்கலன்களை விடுவித்தவர்களிடம் விசாரணை நடத்தாமல் அது தொடர்பில் கருத்து தெரிவித்தவரிடம் விசாரணை நடத்துவது பழிவாங்கும் நோக்கத்திலாகும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்னிலையாக முன்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், சர்ச்சைக்குரிய 223 கொள்கலன்கள் தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் தான் தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரிப்பதற்காக சி. ஐ. டிக்கு அழைத்துள்ளனர்.

சுங்க வரி அறவிடலாமல் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் என்ன இருந்தது என்று யாருக்கும் தெரியாது, இது அநியாயமாகும். இன்று நாட்டில் ஆங்காங்கே வெடிக்கும் போதைபொருள், துப்பாக்கி வேட்டுகள் அந்த கொள்கலன்களில் இருந்திக்கலாம். அரசுக்கு பொருளாதார பிரச்னை தொடர்பில் துளி அளவும் அக்கறை கொள்லாமல் இவ்வாறு தேவையில்லாத செயல்பாடுகளில் ஈடுபடுகிறது - என்றார். (அ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்...

சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவோம். சூத்திரதாரிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின்போது மக்களுக்கு வாக்குறுதியளித்தோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் இருந்து ஒரு துளியளவேனும் நாம் விலக மாட்டோம். விசாரணைகளை துரிதமாக முடித்து, சகல இலங்கையர்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவே முயற்சிக்கின்றோம்.

ஆனால், பல்வேறு காரணங்களால் இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் நாங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்பதனை உறுதியாக கூறிக்கொள்கின்றோம்.

இதேவேளை, இந்த விடயத்தில் தவறான கருத்துகளை பரப்பவேண்டாம். இது மக்களின் அரசாங்கமே. பயங்கரவாத தடைச் சட்டத்தில் சிறையில் உள்ள பிள்ளையானுடன் அரசாங்கம் டீல் வைத்திருப்பதாக குறிப்பிடுவதை முற்றாக நிராகரிக்கிறோம். பல குற்றங்களில் சந்தேக நபராக கருதப்படும் பிள்ளையானுடன் டீல் வைக்க எமக்கு எவ்வித அவசியமும் கிடையாது.

இவர்கள் குறிப்பிடுவதைப்போன்று பிள்ளையானுடன் எங்களுக்கு டீல் இருந்தால் அவருடன் இருந்த இனிய பாரதி கைது செய்யப்பட்டிருப்பாரா? அவ்வாறு எவருடனும் டீல் கிடையாது. மக்களுடனேயே டீல் உள்ளது. அந்த டீலை முறையாக செயற்படுத்துவோம்-என்றார். (அ)

## யாழ். விவசாயி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாய மாவட்டமான யாழ்ப்பாணத்தில் நெற்செய்கைக்கு மேலாக உப உணவுப் பயிர்களான சின்ன வெங்காயம், வேதாளக்காய் வெயங்காயம், உருளைக் கிழங்கு, திராட்சை, கரட், கருணைக் கிழங்கு, பீற்றூட், வாழை, மரவள்ளி, மிளகாய் போன்ற பயிர்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு, தீவகம், தென்மராட்சி போன்ற பெரும் பிரதேசங்களின் பேரூர்களில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இவ்வூர்களில் வாழும் விவசாயிகள் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்து, அறுவடை செய்யும்போது இறக்குமதி வரி விதிப்பு செய்யப்படுவது வழமை. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இவ்வரி விதிப்பு நடைமுறைப் படுத்தப்படவில்லை.

காலநிலை பாதிப்புகளையும் கடந்து, உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் யாழ்ப்பாண விவசாயிகளின் நடைமுறை இடர்பாடுகள் எவை என்பதையும், யாழ்ப்பாணச் சின்ன வெங்காயத்துக்கான கேள்வி தற்போது வெகுவாகக் குறைந்துள்ளதையும், கடந்த இரண்டு வருடங்களாக உற்பத்திக்கான மானிய அடிப்படையிலான விதை உருளைக் கிழங்கு கிடைக்கப்பெறவில்லை என்பதையும் இத்தகைய காரணிகளால் விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியதுடன், சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலத்தில், விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசால் இறக்குமதிகளுக்கு எதிரான வரி விதிக்கப்படுமா? என்பதையும், கடந்த மூன்று ஆண்டுகளாக ஏன் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிக்க வேண்டும்-என்றார். (அ)

## உயிர்த்த ஞாயிறு...

உறுப்பினர் சாணக்கியன் கொண்டு வந்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன அதனை வழிமொழிந்தார்.

இவ்விவாதத்தில் உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பிள்ளையானுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டார். விசாரணைக்கு தடங்கல் வரும் என்பதால் அனைத்து தகவல்களையும் வெளியிட முடியாது எனவும், விசாரணைகள் உரிய வகையில் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## நவாலி சென்...

நடைபெற்றன.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது மக்கள் மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், அருகிலுள்ள கதிர்காம முருகன் ஆலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள்மீது விமானப் படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப் பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களைவிட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள், நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர். அன்றைய தினம் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம்மீது வீசின. இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட, 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொலிஸாருக்கு சொந்தமான டிப்பர்களிலும் மணல் கடத்தல்

## வடக்கு ஆளுநரின் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

**வடக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் சில சட்டவிரோத மணல் கடத்தல் சம்பவங்களில் பொலிஸாருக்குச் சொந்தமான டிப்பர் வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்தில் மணல் விநியோகத்தை சீராக்குவது, சுண்ணாம்புக்கல் அகழ்வு மற்றும் விநியோகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ம.கபிலன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் -பொறியியல், வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டச் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர்ழ் வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர், ஒப்பந்த காரர்கள் சங்க நிர்வாகத்தினர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது " அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டங்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கே மணலை அதிக விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருப்பது தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர், இது தொடர்பில் மீண்டும் மீண்டும் ஆராய்ந்து கொண்டிருக்காமல் முடிவு எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு அமைவாக, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் சில ஆற்றுப்படுக்கைகள், குளங்களிலிருந்து மணலை கழுவி எடுத்துப் பயன்படுத்த முடியும் என்பதுடன் அதற்கான இடங்களை விரைவாக அடையாளப்படுத்துமாறும், உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில் 'யாட்' அமைத்து அங்கிருந்து நியாய விலையில் விநியோகம் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையை உடனடியாக ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக் குளத்தில் ஏற்கனவே கழுவி எடுக்கப்பட்ட மணல் கரைச்சிப் பிரதேச சபை ஊடாக விநியோகிக்கப்படவுள்ளமை தொடர்பிலும் குறித்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஒரு சில பொலிஸாருக்குச் சொந்தமான டிப்பர் வாகனங்களும் ஈடுபடுத்தப்படுவதாகவும் இதன் காரணமாக சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும் மாவட்ட செயலர்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசாங்கத்தின் தாமதத்தால் தொழில் துறைக்கே பாதிப்பு!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 10

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி பற்றி அமெரிக்காவுடன் பேசுகிறோம், பேசுகிறோம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை. பிரச்னை உள்ளதை நாங்களும் அறிவோம், தீர்வையே கேட்கிறோம்.

அரசாங்கத்தின் தாமதம் தொழிற்றுறை யினருக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலத்திரனியல் வணிக கட்டமைப்பில் தோற்றம் பெற்ற சிக்கல்களுக்கு தீர்வு கண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிடுகிறார்.

அந்த தீர்வுகள் என்னவென்பதை அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும். நடைமுறைக்கு சாத்திய மற்ற வகையில் கருத்துக்களை முன்வைப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

வாகன இறக்குமதியின் போது மூன்றாம் தரப்பு நாடுகளில் இருந்து கடன் பற்று பத்திரத்தை விநியோகித்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

2013 ஆம் ஆண்டு முதல் இந்த முறைமை செயற்படுத்தப்பட்டது.

தற்போது இந்த மூன்றாம் தரப்பு நாடுகள் முறைமை சட்டவிரோதமானது என்று குறிப்பிட் டுக் கொண்டு இறக்குமதி செய்த வாகனங்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் அவதானம் செலுத் தியுள்ளது.இது நடைமுறையில் மாறுப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

ஏற்றுமதி சேவைகளுக்கும், சர்வதேச நிறுவனங்களின் தேசிய சேவைகளுக்கும் புதிதாக வரி அறவிடப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதனால் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி பற்றி அமெரிக்காவுடன் பேசுகிறோம், பேசுகிறோம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதுவ ரையில் சாதகமான பதில் கிடைக்க வில்லை.

பிரச்சினை உள்ளதை நாங்களும் அறிவோம், தீர்வையே கேட்கி றோம். அரசாங்கத்தின் தாமதம் தொழிற்றுறையின ருக்கே பாதிப்பை ஏற்படுத்தும்-என்றார். (அ)

# இந்தியாவுக்கே கச்சதீவு சொந்தம்!

## கூறுகிறார் அர்ஜுன் சம்பத்

சென்னை, ஜூலை 10

கச்சதீவில் தேசியக் கொடி ஏற்றும் முயற்சி நடைபெற்று வருவதாக, ஹிந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்வாண்டிலும், சுதந்திர தினம், விநாயகர் சதுர்த்தி மற்றும் அடுத்தாண்டு குடியரசு தினம் ஆகிய மூன்று நாட்களிலும் கச்சதீவில் தேசியக் கொடி ஏற்ற முயற்சிப் போம் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமானது என்பதை அறிவிக்கவே இந்த முயற்சி எனவும், அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# வடக்குக் கல்விப் பணிப்பாளராக கிழக்கை சேர்ந்த ஜெயச்சந்திரன்!



யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரி வை.ஜெயச்சந்திரன் அரச சேவை ஆணைக்குழு வினால் நியமிக்கப்பட் டுள்ளார்.

மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாள ராக பணியாற்றியவேளை இந்த பதவி உயர்வு கிடைத் துள்ளது.

இவர் கிழக்கு மாகாணத்தின் திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் ஏலவே திருக்கோவில் வலயம், பட்டிருப்பு வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக, பதில் வலயக்கல்விப் பணிப்பாளராக பணியாற்றியவராவார்.

வடக்கு மாகாணத்தில் கிழக்கு மாகாண கல்வி அதிகாரி ஒருவர் மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# செம்மணி மனித புதைகுழி குறித்து இலங்கையுடன் பேசியதா பிரிட்டன்?

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார் உமா குமரன் எம்.பி.

லண்டன், ஜூலை 10

பிரிட்டன் அரசாங்கம் செம் மணி மனித புதைகுழி விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண் டுள்ளதா?மனித புதைகுழிகளை அகழும் நடவடிக்கைகளுக்கு பிரிட் டன் ஏதாவது உதவிகளை வழங்கு கின்றதா? என பிரிட்டன் பாரா ளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லமியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்

வெளிவிவகார குழுவின் கூட்டத் திலேயே பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் இது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது-நீங்கள் இறுதியாக இந்த குழு வின் முன்னிலையில் 2024 நவம்ப ரில் தோன்றியபோது நான் தமிழ் மக்களுக்கான நீதி குறித்து உங்களி டம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இந்த விடயம் குறித்து நீங்கள் கொண்டிருக்கும் தனிப்பட்ட அர்ப் பணிப்புக்காகவும் கடந்த ஒரு தசாப் தத்திற்கு மேலாக தமிழ் சமூகத் துக்கு நீங்கள் வெளிப்படுத்திய ஆதரவுக்கும் நான் உங்களுக்கு எனது நன்றியை தெரிவிப்பதன் மூலம் எனது உரையை ஆரம்பிக்க விரும்புகின்றேன்.

உங்களுக்கு இது தொடர்பிலான எனது குடும்பத்தின் கதை தெரியும்.

இலங்கையில் மோதலின்போது பாரதூரமான மனித உரிமை மீறல் கள், துஷ்பிரயோகங்களில் ஈடுபட் டவர்களுக்கு எதிராக மார்ச் மாதம் பிரிட்டன் தடைகளை அறிவித் தமை குறித்து நான் திருப்தியடை கின்றேன்.

இது அந்த சமூகத்துக்கு இந்த தருணத்தில் மிகவும் முக்கியமான விடயம். ஆனால் கவலையளிக்கும் விதத்தில் கடந்த மாதம்,இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணம், செம்மணி யில் மற்றுமொரு மனித புதைகு ழியை கண்டுபிடித்துள்ளனர்.

அந்த புதைகுழியில் மூன்று குழந்தைகளின் உடல்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

புதிதாக அடையாளம் காணப் பட்டுள்ள மனித புதைகுழிகளை சர்வதேச தராதரத்தின் கீழ் அகழ்வு செய்வதற்கான போதிய வளங்கள் இலங்கையில் இல்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையா ளர் அலுவலகம் கரிசனை வெளி யிட்டுள்ளது.

பிரிட்டன் அரசாங்கம் இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங் கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதா?மனித புதை குழிகளை அகழும் நடவடிக்கை எளிற்கு பிரிட்டன் ஏதாவது உதவி களை வழங்குகின்றதா?-என்றார். (அ)

# மலேசியா செல்கிறார் வெளியுறவு அமைச்சர்

கொழும்பு, ஜூலை 10

வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வியாழக்கிழமை மலேசியா செல்லவுள்ளார். மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட அந்நாட்டு அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை அவர் சந்திக் கவுள்ளார்.

மேலும் அமைச்சர் விஜித ஹேரத் இந்த விஜயத்தின் போது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டிலும் பங்கேற்க வுள்ளார். இதன் போது ஆஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பிலும் அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொள்ள வுள்ளார்.

அதேவேளை நாளை வெள்ளிக்கிழமை தென் கொரிய முதல் துணை அமைச்சருடனும், பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சருடனும், பிலிப்பைன்ஸ் வெளிவிவகார அமைச்சருடனும் சந்திப்பில் ஈடுபடவுள் ளார். இதன்போது இலங்கைக்கும் குறித்த நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.